क्षेत्रीय कार्यालय (तमिलनाडु)
REGIONAL OFFICE (TAMILNADU)
कर्मचारी राज्य बीमा निगम
EMPLOYEES' STATE INSURANCE CORPORATION
१४३, स्टर्लिंग रोड, चेन्नै-६०० ०३४.
143, STERLING ROAD, CHENNAI-600 034.

Direct Line: 044-28306300
Fax : 044-28238559

மின்னஞ்சல்: rd-tamilnadu@esic.nic.in | (आई एस ओ 9001:2000 प्रमाणित) (ISO 9001:2000 CERTIFIED) | வலைத்தளம்: www.esichennai.org

# தொழிலதிபர்களின் கனிவான கவனத்திற்கு

தொழிலாளர்களுக்கான அரசினர் ஈட்டுறுதிக் கழகம் (E.S.I. Corporation) பல்வகைகளில் தனது பணிகளை விரிவுபடுத்திக்கொண்டிருக்கிறது. எனவே இந்நிறுவனத்தின் பணிகளும் அது வழங்கும் பல்வேறு உதவிகளும் அதிகரித்துள்ளன. இதன் விளைவாக, இத்திட்டத்தின் கீழ் காப்புறுதி பெறுவோரின் எதிர்பார்ப்புகளும் அதிகரித்தவண்ணம் உள்ளன. இச்சூழலில், இத்திட்டம் பயனளிக்கும் விதத்தை மேலும் உயர்த்தும் வகையில் இந்நிறுவனத்தின் பணிகளை கணினிமயமாக்கப் பெரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. “Project Panchdeep“ என்று பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டத்தின் கீழ் இந்நிறுவனத்தின் பணிகளைக் கணினிமயமாக்குவதற்காக தங்கள் ஒத்துழைப்பு கோரப்படுகிறது.

இதன் முதல் கட்டமாக, இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் அனைவரையும் துல்லியமாக அடையாளம் காணும் முகமாக, அவர்கள் பற்றிய விவரங்கள், புகைப்படம் மற்றும் கைரேகைகள் ஆகிய உயிரிக்கூறுகள் பற்றிய விவரங்கள் (bio-metric data) பதித்த இரண்டு "மின்னணு அடையாள அட்டைகள்" (தொழிலாளர்களுக்கு ஒன்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஒன்றுமாக) வழங்கப்பெறும். இவை நாடு முழுவதும் பயன்படுத்தக்கூடியவை ஆகும். இது தொடர்பாக, தற்பொழுது தங்கள் தொழிற்சாலையில் / நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்துத் தொழிலாளர்களும் அவர்கள் பற்றிய விவரங்களை அதற்கான அறிக்கைப்படிவத்தில் புதிதாக அனுப்பிவைக்கத் தேவையாகிறது. இதற்கான படிவங்களை இ. எஸ். ஐ. கிளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும், (http://www.esichennai.org/forms/DF_form1.pdf) என்ற இ.எஸ்.ஐ. வலைத்தளத்திலிருந்தும் தருவித்துக்கொள்ளலாம்.

தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் கைரேகை உட்பட உயிரிக்கூறுகளைக் கணினியில் பதிவதற்கென நடத்தப்படும் "பதிவு முகாம்"களுக்கு புகைப்படம் எடுக்க தொழிலாளர்கள் அனைவரும் தத்தம் குடும்பத்தார் அனைவருடன் தவறாது வருகை புரிய வேண்டும். முகாம்கள் நடைபெறவுள்ள இடம் மற்றும் தேதி குறித்த விவரங்களை தங்களுக்குரிய இ.எஸ்.ஐ கிளை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளவும்.

இ.எஸ்.ஐ (பொது) முறை விதிகள் 1950- விதி 16- ன் படி தொழிலாளர்களிடமிருந்து புதிய அறிக்கைப் படிவங்கள் பெறுவதிலும் மற்றும் அவர்களைத் தத்தம் குடும்பத்தார் அனைவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள சிறப்பு முகாம்களில் தவறாது பங்குகொள்ளச் செய்வதிலும் தங்களது மேலான ஒத்துழைப்பு கோரப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் விவரங்கள் தேவையாயின், எமது மண்டல அலுவலகத்தையோ அல்லது கீழே தரப்பட்டுள்ள துணை மண்டல அலுவலகங்களையோ அணுகவும்.

**கோயமுத்தூர்:**
துணை மண்டல அலுவலகம்,
இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன்,
எண்: 1897, திருச்சி சாலை, இராமனாதபுரம்,
கோயமுத்தூர்- 641045.
தொலைபேசி: 0422-2315940

**சேலம்:**
துணை மண்டல அலுவலகம்,
இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன்,
தீர்த்தமலை வணிக வளாகம், 2வது & 3வது மாடி,
எண்: 39/57, 3வது ரோடு, சேலம்- 636 009.
தொலைபேசி: 0427-2336941

**மதுரை:**
துணை மண்டல அலுவலகம்,
இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன்,
4வ்து பிரதான சாலை, கே.கே.நகர், மதுரை- 625020
தொலைபேசி: 0452-2531257

**திருநெல்வேலி:**
துணை மண்டல அலுவலகம்,
இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன்,
நகராட்சி வணிக வளாகம், சாலைத் தெரு,
சிந்துபூந்துறை, திருநெல்வேலி - 627001
தொலைபேசி: 0462-2330136

ந. பரசுராமன்
கூடுதல் ஆணையாளர் &
மண்டல இயக்குநர்

| Letter to Employer (English) | Letter to Employer (Tamil) |
|---|---|
| http://www.esichennai.org/forms/eyr_ltr_english.pdf | http://www.esichennai.org/forms/eyr_ltr_tamil.pdf |